தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண். 47/ந/2022
நாள். 12.05.2022

டாக்டர். தா.சுந்தரவடிவேலன்,
நாகப்பட்டினம். – முறையீட்டு மனுதாரர்

1) திரு.R.ரெங்கசாமி,
நாகப்பட்டினம்.

2) திரு.M.செந்தில்சிவக்குமார்,
நாகப்பட்டினம்.

3) ஆணையாளர்,
நாகப்பட்டினம் நகராட்சி. – எதிர்மனுதாரர்கள்

நாகப்பட்டினம் மாவட்டம், 33 சாலமன் தோட்டம், காடம்பாடி என்ற விலாசத்தில் வசிக்கும் டாக்டர்.தா.சுந்தரவடிவேலன் என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் அளித்த 16.10.2021 நாளிட்ட முறையீட்டு மனுவில், நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான நாகப்பட்டினம் புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடை எண்கள்.42 மற்றும் 44 ஆகிய இரண்டு கடைகளை திரு.R.ரெங்கசாமி மற்றும் திரு.M.செந்தில்சிவக்குமார் ஆகிய இருவரும் ஏலம் எடுத்து, அதனை உள்வாடகைக்கு விட்டு கொரானா நோய்தொற்று காலத்தில் இருகடைகளின் முன் ஷெட்போட்டு கள்ளத்தனமாக மதுபான விற்பனை செய்வதாக தெரிவித்து தனது மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டார். இம்முறையீட்டு மனு தொடர்பாக நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கையும், நகராட்சி ஆணையரின் வாக்குமூலம், மற்றும் மனுதாரரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டு, அதனடிப்படையில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை நடைபெற்றதை தடுக்க தவறிய சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், கடை எண்கள்.42 மற்றும் 44 ஆகியவற்றின் ஏல உரிமத்தை ரத்து செய்து மறு ஏலம் மேற்கொள்ளுமாறு நாகப்பட்டினம் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவத்தால் ஆணை எண்.095/ந/2021 நாள்.27.12.2021–ல் ஆணை வெளியிடப்பட்டது.

ii) இம்முறைமன்ற ஆணையினை செயல்படுத்தும் வகையில் நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரால் தனது செயல்முறைகள் ந.க.எண்.3469/2021/அ4 நாள்.24.01.2022–ல் மேற்படி ஏலம் எடுத்தவர்களின் கடையின் குத்தகை உரிமத்தினை இரத்து செய்து ஆணையிடப்பட்டு, கடையினை சீல் வைத்து மூடப்பட்டது.

iii) கடை குத்தகை உரிம ரத்து ஆணையினை எதிர்த்து கடையின் குத்தகைதாரர்களான திரு.R.ரெங்கசாமி மற்றும் திரு.M.செந்தில்சிவக்குமார் ஆகியோர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனுக்கள் தாக்கல் செய்தனர் (W.P.No.3832/2022 மற்றும் W.P.No.3839/2022).

iv) மேற்படி வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 14.03.2022–ல் கீழ்கண்டவாறு தீர்ப்புரை வழங்கியுள்ளது.

- The impugned order of the Municipality which gives effect to the order of the Ombudsman is dated 24.01.2022 and perpetrates the error committed by the Ombudsman of not having heard the petitioners prior to taking a decision in the matter. Since, admittedly, neither the Ombudsman nor the Municipality have heard the petitioners prior to passing of orders dated 27.12.2021 and 24.01.2022 respectively, orders dated 27.12.2021, though not challenged before me, and 24.01.2022 are set aside.

- The application filed by the complainant, who is also not arrayed before me, stands restored to the file of the Ombudsman, who shall hear the petitioners as well as the complainant by issuance of notices. He shall consider details / documents, if any, submitted by both parties, and pass orders afresh, which shall be given effect to by the respondent Corporation, in accordance with law. Since the shops are under seal pursuant to the impugned order, proceedings, as directed aforesaid, shall be completed expeditiously, in any event, within a period of four weeks from today.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றமானது நீதிப்பேராணை மனுக்கள் எண். 3832/2022 மற்றும் 3839/2022 மீதான 14.03.2022 நாளிட்ட தீர்ப்பின் அடிப்படையில் மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான நாகப்பட்டினம் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடை எண்கள். 42 மற்றும் 44 ஆகியவற்றின் குத்தகைதாரர்களான திரு.R.ரெங்கசாமி மற்றும் திரு.M.செந்தில்சிவக்குமார் ஆகியோருக்கு இந்நேர்வில் தங்களது விளக்கத்தினை அளிக்க வாய்ப்பளிக்கும் பொருட்டு, இவர்களை இந்நேர்வில் எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டு, 25.04.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. மேலும், ஆணை எண்.095/ந/2021–ன் முறையீட்டு மனுதாரர் நாகப்பட்டினத்தை சேர்ந்த டாக்டர்.தா.சுந்தரவடிவேலன் மற்றும் எதிர்மனுதாரான நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் ஆகிய இருவரையும் 25.04.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறும் அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

2) மனுதாரர் டாக்டர்.தா.சுந்தரவடிவேலன், எதிர்மனுதாரர்களான திரு.R.ரெங்கசாமி மற்றும் திரு.M.செந்தில்சிவக்குமார் மற்றும் நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் ஆகியோர் மேற்படி நேரடி விசாரணைக்கு ஆஜராகி தங்களது வாக்குமூலங்களை அளித்தனர்.

3) மனுதாரர் டாக்டர் தா.சுந்தரவடிவேலன் நேரடி விசாரணையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

“நாகப்பட்டினம் பேருந்து நிலையத்தில் நகராட்சிக்கு சொந்தமான டாஸ்மாக் கடை எண்.43 க்கு வலது மற்றும் இடப்புறத்தில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கடை எண். 42 மற்றும் 44ல்

பார் நடத்தியது திரு. முத்துப்பாண்டி என நினைத்து, இம்முறைமன்றத்தில் புகார் மனு அளித்திருந்தேன். ஆனால், பாரை நடத்தி வந்தது திரு.M.செந்தில்சிவக்குமார் மற்றும் திரு.R.ரெங்கசாமி ஆகியோர் என தாமதமாக நான் நகராட்சியிலிருந்து தெரிந்துகொண்டேன். எனவே, எனது புகார் மனுவின் மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

மனுதாரர் டாக்டர்.தா.சுந்தரவடிவேலன் தனது மற்றொரு மனுவில்

''நான் நாகப்பட்டினம் நகராட்சி கடையை திரு.R.ரெங்கசாமி மற்றும் திரு.M.செந்தில்சிவக்குமார் ஆகியோர் துரைபாண்டிக்கு டாஸ்மாக் பார் நடத்த உள்வாடகைக்கு விட்டு இருந்ததாகவும், நகராட்சி ஆணையர் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் நான் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்தில் புகார் அளித்து முறையீட்டு எண்.95/ந/2021 ஆக பதிவு செய்யப்பட்டு 16.12.2021 அன்று விசாரணைக்கு ஆஜரானேன்.

டாஸ்மாக் பார் நடத்தியது முத்துப்பாண்டி என்பதும் திரு.R.ரெங்கசாமி மற்றும் திரு.M.செந்தில்சிவக்குமார் ஆகியோர் கூட்டுச் சேர்ந்து கூட்டுத் தொழிலாக டாஸ்மாக் பார் நடத்தி வந்ததும், நகராட்சி மூலமாக தாமதமாக தெரிந்துக் கொண்டேன்.

நான், எனக்கு கிடைத்த தவறான தகவல்கள் அடிப்படையில் திரு. துரைப்பாண்டி என்பவர் டாஸ்மாக் பார் நடத்தி வருவதாக கருதி புகார் அளித்துவிட்டேன்.

எனவே, நான் தவறான பெயரால், பெயர் குழப்பத்தால் புகார் அளித்த காரணத்தால் எனது புகாரின் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்பதால், நான் குறிப்பிட்டுள்ள திரு. துரைப்பாண்டியும், டாஸ்மாக், கடை எண்.5605–க்கு இணைந்த திரு. முத்துப்பாண்டியும் வேறு வேறு நபர்கள் என்பதால் எனது புகாரை நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன் என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

4) எதிர்மனுதாரர்கள் திரு.R.ரெங்கசாமி மற்றும் திரு.M.செந்தில்சிவக்குமார் ஆகிய இருவரும் சேர்ந்து விசாரணையில் தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு அளித்துள்ளனர்.

''நாகப்பட்டினம் பேருந்து நிலையத்தில் கடை எண். 43ல் டாஸ்மாக் கடை நடந்து வருகிறது. அதற்கு வலது மற்றும் இடதுபுறத்தில் உள்ள கடை எண்கள். 42 மற்றும் 44 ஆகிய இரண்டு கடைகளை நாங்கள் குத்தகைக்கு எடுத்துள்ளோம். ஒரு கடையை மதுபான பாராகவும், இன்னொரு கடையை டிராவல்ஸ் நடத்துவதற்காக எடுத்திருந்தோம். ஆனால், கொரானா தொற்றின்போது, மேற்கண்ட டிராவல்ஸ் கடை எண். 44ல் பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது. அந்த இடத்தில் சில சமூக விரோதிகள் கள்ளத்தனமாக மதுபானம் விற்றது எங்களுக்குத் தெரியாது எனவும், கள்ளத்தனமாக மது விற்றதில் எங்களுக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்'' என்று தெரிவித்துள்ளனர்.

5) எதிர்மனுதாரான நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி உதவியாளர் திரு.கே.கிருஷ்ணன் ஆகியோர் 25.04.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:–

''நாகப்பட்டினம் பேருந்து நிலையத்தில் கடை எண்.43 டாஸ்மாக் நிறுவனத்திற்கு வாடகைக்கு விடப்பட்டது. மேற்கண்ட கடைக்கு இடது மற்றும் வலப் பக்கமாக உள்ள நகராட்சிக்கு சொந்தமான கடை எண். 42 மற்றும் 44 ஆகிய பூட்டியிருந்த இரண்டு கடைகளுக்கு வெளியே கள்ளத்தனமாக சமூக விரோதிகள் மதுபானம் விற்பனை நடைபெற்றதைத் தொடர்ந்து மேற்கண்ட 42 மற்றும் 44 ஆகிய

கடைகள் வருவாய் துறையால் பூட்டி சீல் வைக்கப்பட்டது. வருவாய் துறையின் விசாரணைக்கு பின்னர் வருவாய் துறையினராலேயே மேற்கண்ட கடைகள் திறக்கப்பட்டன. இம்முறைமன்றத்தில் திரு. சுந்தரவடிவேலன் அளித்திருந்த புகாரின் மீது விசாரணை மேற்கொண்ட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் இறுதியாணையை தொடர்ந்து, மேற்கண்ட இரண்டு கடைகளுக்குமான குத்தகை உரிமம் ரத்து செய்ய ஆணையிடப்பட்டு, கடையினை நகராட்சி வசம் ஒப்படைக்குமாறு ஆணையிடப்பட்டது. குத்தகைதாரர்கள் மேற்கண்ட கடைகளை ஒப்படைக்காததால், மேற்கண்ட இரண்டு கடைகளுக்கும் (கடை எண். 42 மற்றும் 44) 09.03.2022 அன்று நகராட்சியால் பூட்டி சீல் வைக்கப்பட்டது என்றும், இதனைத் தொடர்ந்து குத்தகைதாரர்களால் வழக்கு தொடரப்பட்டது என்றும், (WP No. 3832, 3839/2022) மேலும் 14.3.2022ல் இந்நேர்வு தொடர்பாக மறு விசாரணை மேற்கொண்டு இறுதியாணை வெளியிட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்றும், தற்போது மேற்கண்ட இரண்டு கடைகளும் பூட்டிய நிலையில் நகராட்சி வசம் உள்ளது என்று இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மனுதாரர் சமூக ஆர்வலர் என்கின்ற பெயரில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் நூற்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்களை நகராட்சிக்கு அளித்துள்ளார். அளிக்கப்படும் பதிலைத் தொடர்ந்து சம்பந்தப்பட்டவர்களை மிரட்டி பண வசூல் செய்கிறார். மேலும், அவர் மீது காவல்துறையில் வேறு காரணங்களுக்காக FIR பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரிடமும் நகராட்சியால் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று தெரிவித்துள்ளனர்.

மேலும் ''எனது 22.4.2022 நாளிட்ட கடிதத்தையே எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

6) நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் 22.04.2022 நாளிட்ட தனது கடிதத்தில் கீழ்காணும் அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

''நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடை எண்.43, டாஸ்மாக் நிறுவனத்திற்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. மேற்படி கடையின் வலது மற்றும் இடதுபுறம் உள்ள கடை எண்.42 மற்றும் 44–ல் வெளி மாநில மதுபானங்கள் வைத்து வியாபாரம் செய்ததாகவும், அரசு அனுமதி பெறாமல் மதுபானக்கூடம் நடத்தியதாகவும், கடையினை உள்வாடகைக்கு விடப்பட்டுள்ளதாகவும் வரப்பெற்றுள்ள புகார் மனு மீது நகராட்சியின் 16.08.2021 நாளிட்ட விளக்கக் கடிதம் மூலம் கடை எண்.42 மற்றும் 44–ல் குத்தகைதாரர்களுக்கு விளக்கம் கோரப்பட்டது.

குத்தகைதாரரர்களால் தெரிவிக்கப்பட்ட விளக்கத்தினை ஏற்றும், நேராய்வின் போது மதுபானக்கூடம் எதுவும் நடைபெறவில்லை எனவும், கடையினை உள்வாடகைக்கு விடப்படவில்லை எனவும் தெரியவந்ததால், மேற்படி கடையினை குத்தகைதாரர்களால் தொடர்ந்து நடத்த அனுமதிக்கப்பட்டது. இதன் விவரம் இந்நகராட்சியின் 01.09.2021 நாளிட்ட அறிவிப்பு கடிதம் மூலம் திரு.தா.சுந்தரவடிவேலன் என்பவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சென்னை அவர்களால் முறையீட்டு மனு எண்.95/ந/2021 மீது 16.12.2021 அன்று நேரடி விசாரணை நடைபெற்றது.

மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சென்னை அவர்களின் 27.12.2021 நாளிட்ட ஆணையில் கடை எண்.42 மற்றும் 44 ஆகியவற்றின் ஏலம் எடுத்தவர்களின் ஏல உரிமத்தை ரத்து செய்து மறு ஏலத்திற்கான வழிமுறைகளை மேற்கொள்ளுமாறு ஆணையிடப்பட்டது.

அதன்படி இந்நகராட்சியின் 24.01.2022 நாளிட்ட செயல்முறை கடிதம் மூலம் மேற்படி கடைகளின் உரிமத்தினை ரத்து செய்து உத்தரவிடப்பட்டு உடனடியாக கடையினை பூட்டி நகராட்சி வசம் ஒப்படைக்க குத்தகைதாரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. குத்தகைதாரரர்களால் கடையினை பூட்டி

நகராட்சி வசம் ஒப்படைக்காத காரணத்தினால் நகராட்சியால் **09.03.2022** அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டது.

நகராட்சியால் கடைகளின் உரிமம் ரத்து செய்யப்பட்டதை எதிர்த்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு W.P.No.3832, 3839/2022–ன்மீது **14.03.2022** அன்று மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஆணையில் மறு விசாரணை மேற்கொண்டு இறுதி உத்தரவு வழங்குவதற்கு நீதிபேராணை பிறப்பிக்கப்பட்டுள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலம், எதிர்மனுதாரர்களின் வாக்குமூலங்கள் மற்றும் நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான நாகப்பட்டினம் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடை எண்கள். 42 மற்றும் 44 ஆகியவற்றை குத்தகை எடுத்த எதிர்மனுதாரர்களான திரு.R.ரெங்கசாமி மற்றும் திரு.M.செந்தில்சிவக்குமார் ஆகியோர் கொரானா நோய் தொற்றுக் காலத்தில் முறைகேடாக மதுபானம் விற்பனை செய்யவில்லை என வாக்குமூலம் அளித்துள்ளனர். இருப்பினும், மேற்படி கடையில் வேலை செய்துவந்த திரு.பாலமுருகன் என்பவர் வருவாய் நோக்கத்தில் வெளிமாநில மதுபானங்களை வைத்து திரு.R.ரெங்கசாமி மற்றும் திரு.M.செந்தில்சிவக்குமார் ஆகியோருக்கு தெரியாமல் வியாபாரம் செய்து வந்ததும், டாஸ்மாக் நிறுவனம் மூலம் 06.08.2021 அன்று இச்செயல் குறித்து கண்டறியப்பட்டு மதுவிலக்கு காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இது தொடர்பாக வேறேதேனும் தவறுகள் நடக்காத வண்ணம் கடை எண்.44 தற்காலிகமாய் பூட்டி வைக்கப்பட்டது என்றும் பின்னர் டாஸ்மாக் கடைக்கும் பார் நடத்தும் நபருக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என முடிவெடுத்து இரு தினங்களில் வட்டாட்சியர் மூலம் கடை திறக்கப்பட்டது என்ற விவரம் நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து தெரியவருகிறது. மனுதாரரும் தனது வாக்குமூலத்தில் மேற்படி குத்தகைதாரர்கள் தங்களது கடைகளை உள்வாடகைக்கு விடவில்லை எனவும், பெயர் குழப்பத்தால் தவறுதலாக புகார் மனு அளிக்கப்பட்டதாகவும், எனவே, தனது புகார் மனு மீது எவ்வித நடவடிக்கையும் இம்முறைமன்றம் எடுக்க வேண்டாம் என தெரிவித்து தனது மனுவினை திரும்ப பெற்றுக் கொண்டார். மனுதாரர் தமது புகார் மனுவினை திரும்ப பெற்றதால் இம்மனு மீதான நடவடிக்கையை தள்ளுபடி செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு மே திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) டாக்டர்.தா.சுந்தரவடிவேலன்,
33, சாலமன் தோட்டம்,
காடம்பாடி, நாகப்பட்டினம் - 611 001.

2) திரு.R.ரெங்கசாமி,
57, பிள்ளையார் கோவில் தெரு,
தெற்கு பால்பண்ணை சேரி,
நாகப்பட்டினம் 611 003.

3) திரு.M.செந்தில்சிவக்குமார்
63, மேட்டு பங்களா,
காடம்பாடி, நாகப்பட்டினம் 611 001.

4) ஆணையாளர்,
நாகப்பட்டினம் நகராட்சி,
நாகப்பட்டினம் - 611 001.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

12/5/22

செயலாளர்.

12/05/22

உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் தமிழ்நாடு மாநில
சென்னை –600 032